தினகரன் கரூர்

25.10.2024 • Friday • Trichy • Dinakaran 11

இந்த நாள்

- குரோதி வருடம் ஐப்பசி மாதம் 8-ம் நாள். வெள்ளிக்கிழமை. தேய்பிறை.
- திதி: நவமி இரவு 3.23 மணி வரை; அதன் பிறகு தசமி.
- நட்சத்திரம்: பூசம் காலை 7.40; அதன் பிறகு ஆயில்யம்.
- யோகம்: மரண யோகம்.
- நல்ல நேரம்: காலை 9.15 - 10.15; மாலை 4.45 - 5.45 மணி வரை.
- ராகு காலம்: காலை 10.30 - 12.00 மணி வரை.
- எமகண்டம்: மாலை 3.00 - 4.30 மணி வரை.
- சந்திராஷ்டமம்: கேட்டை, மூலம்.
- சூலம்: மேற்கு; பரிகாரம்: வெல்லம்.

வானிலை

இன்று		நாளை	
அதிகபட்சம்	குறைந்தபட்சம்	அதிகபட்சம்	குறைந்தபட்சம்
32 C / 89.6 F	24 C / 75.2 F	31 C / 87.8 F	24 C / 75.2 F

இன்று லேசான மழை பெய்யும்.

பெட்டிக்கடையில் 800 கிராம் குட்கா பொருட்கள் பறிமுதல் பக்கம் 12

வெல்டர் வீட்டில் 4 பவுன் நகை திருட்டு பக்கம் 13

கிருஷ்ணராயபுரம் வட்டத்தில் "உங்களைத் தேடி உங்கள் ஊரில்" திட்ட முகாம்

₹98.30 லட்சம் மதிப்பில் 47 பேருக்கு நலத்திட்ட உதவி

● கலெக்டர், சட்டமன்ற உறுப்பினர் வழங்கினர்

● இன்று காலை 6 மணி முதல் மீண்டும் கள ஆய்வு

கிருஷ்ணராயபுரம், அக்.25: கிருஷ்ணராயபுரம் வட்டத்தில் \"உங்களைத் தேடி,உங்கள் ஊரில்\" திட்ட முகாமில் 47 பயனாளிகளுக்கு ரூ.98.39 லட்சம் மதிப்பீட்டில் பல்வேறு துறைகள் சார்பாக நலத்திட்ட உதவிகளை கலெக்டர் தங்கவேல் தலைமையில் எம்எல்ஏ சிவகாமசுந்தரி முன்னிலையில் வழங்கப்பட்டது.

கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் வட்டத்தில் \"உங்களைத் தேடி, உங்கள் ஊரில்\" திட்டத்தின்கீழ் மாவட்ட கலெக்டர் தங்கவேல், பல்வேறு துறைகள் சார்பாக நடைபெற்று வரும் வளர்ச்சித் திட்டப் பணிகளை நேரில் கள ஆய்வு மேற்கொண்டார்.

இதுகுறித்து கலெக்டர் தங்கவேல் தெரிவித்ததாவது:

பொதுமக்களின் இடங்களுக்கே சென்று, குறைகளைக்கேட்டு உடனுக்குடன் தீர்வுக்கான, அரசு இயந்திரம் களத்திற்கு சென்று பணியாற்றும் \"உங்களைத் தேடி உங்கள் ஊரில்\" திட்டம் சென்னை தவிர்த்து அனைத்து மாவட்டங்களிலும் ஒவ்வொரு மாதமும் நடத்தப்படும் என தமிழ்நாடு அரசின் வழிகாட்டு நெறிமுறையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் கரூர் மாவட்டத்தில் பொதுமக்களின் குறைகளைக் கேட்டறியும் \"உங்களைத் தேடி, உங்கள் ஊரில்\" திட்ட முகாமானது இன்று (நேற்று) காலை 9 மணிக்கு கிருஷ்ணராயபுரம் வட்டத்தில் தொடங்கியுள்ளது. கிருஷ்ணராயபுரம் வட்டத்திற்குட்பட்ட 25 வருவாய் கிராமங்களிலும் அலுவலர்கள் மூலம் கள ஆய்வு மேற்கொண்டு பொதுமக்களின் குறைகளைக் கேட்டறிந்து தீர்வுகாண திட்டமிடப்பட்டுள்ளது.

அதன்படி களப் பணிக்குச் செல்லும் அலுவலர்கள் நேற்று காலை 9 மணி முதல் 1.30 மணி வரை அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், நியாய விலைக் கடைகள், கிராம நிர்வாக அலுவலகம், வட்டார பொது சுகாதார மையக் கட்டிடம், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம், சத்துணவுக் கூடங்கள், பள்ளிகள் மற்றும் வட்டாட்சியர் அலுவலகம், வட்டார வளர்ச்சி அலுவலகம் உள்ளிட்ட இடங்களில் நேரில் ஆய்வு மேற்கொண்டனர்.

பிற்பகல் 2 மணி முதல் 4.30 வரை கரூர் வட்டத்தில் உள்ள அரசுத் துறை அலுவலர்களின் கருத்துக்கள் அடிப்படையிலான ஆய்வு கூட்டமும், மாலை 4.30 மணி முதல் 6 மணி வரை பொதுமக்களுடனான கலந்துரையாடலும், மாலை 6 மணி முதல் தொடர்புடைய வட்டத்தின் பல்வேறு பகுதிகளுக்குச் சென்று அங்குள்ள தெருவிளக்குகளின் செயல்பாடுகள், பூங்காக்கள், நூலகங்கள், பேருந்து நிலையங்கள், அரசு விடுதிகள், பொது மற்றும் சமுதாய கழிவறைகள் ஆகியவற்றை ஆய்வு செய்தனர்.

மணவாசி அங்கன்வாடி மையத்தில் குழந்தைகளுக்கு வழங்கப்படும் முன் பருவ கல்வி குறித்து ஆய்வு செய்யப்பட்டது. தொடர்ந்து மாயனூர் அரசு உயர்நிலை பள்ளியில் உயர் தொழில் நுட்ப கணினி ஆய்வகத்தை பார்வையிட்டு, ஆசிரியர்கள் கற்பிக்கும் முறை மற்றும் மாணவர்களின் கற்றல் திறன் குறித்து ஆய்வு செய்யப்பட்டது. மாயனூர் நியாய விலை கடையில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

பஞ்சப்பட்டி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் உள்ள மருந்தகம், ஆய்வகம், உள் மற்றும் வெளி நோயாளிகள் பிரிவு, அறுவை சிகிச்சை அரங்கம், கர்ப்பிணி பெண்கள் பரிசோதனை பிரிவு, பிரசவ அறை குறித்து விரிவாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

பஞ்சப்பட்டியில் விவசாயி ஒருவர் மானாவாரி பகுதி மேம்பாடு ஒருங்கிணைந்த பண்ணையத் திட்டம் 2024- 25 மூலம் ரூ.30,000 மானியத்தில் வழங்கப்பட்டுள்ள கரவை மாடு மண்புழு வளர்ப்பு, பழ மரக்கன்றுகள் தேனீ வளர்ப்பு மற்றும் பயிர் சாகுபடி என ஒருங்கிணைந்த பண்ணைய தொழில் செய்வதை பார்வையிட்டு வேளாண் பொருட்களை கேட்டறிந்தனர்.

சந்தைப்படுத்துதல் தொடர்பாக மகாதானபுரம் பகுதியில் விவசாயி ஒருவர் ரூ.46,554 அரசு மானியம் பெற்று மரவள்ளி கிழங்கு சாகுபடி செய்வதை பார்வையிட்டு, மரவள்ளி கிழங்குகளை சந்தைப்படுத்துதல் குறித்து கேட்டறியப்பட்டது.

தொடர்ந்து மதியம் கிருஷ்ணராயபுரம் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் மாவட்ட நிலை அலுவலர்களுடன் ஆய்வு கூட்டம் நடத்தப்பட்டு ஆய்வு அறிக்கைகள் பெறப்பட்டது.

பிற்பகல் மகாதானபுரம் தெற்கு கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம், கிருஷ்ணராயபுரம் அரசு ஆதிதிராவிடர் மாணவர் விடுதி, லாலாபேட்டை அரசு கல்லூரி மாணவர் விடுதி ஆகிய இடங்களில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இவ்வாறு கலெக்டர் தெரிவித்தார்.

பின்னர் நடைபெற்ற அலுவலர்களுக்கான ஆய்வுக் கூட்டத்தில் கூட்டுறவுத் துறையின் சார்பாக 24 பயனாளிகளுக்கு ரூ. 27.89 லட்சம் மதிப்பீட்டில் பயிர் கடன்களும் 2 பயனாளிகளுக்கு ரூ. 2.05 லட்சம் மதிப்பீட்டில் விவசாய நகை கடன்களும், 10 மகளிர் சுய உதவி குழுவினருக்கு ரூ.68.27 லட்சம் மதிப்பீட்டில் வங்கி கடன் உதவிகளும், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் சார்பாக 1 பயனாளிக்கு ரூ.16,000 மதிப்பீட்டில் இயற்கை இடர்பாடு நிவாரண உதவித்தொகைக்கான ஆணையும், வழங்கல் துறையின் சார்பாக 10 பயனாளிகளுக்கு புதிய மின்னணு குடும்ப அட்டையும் என மொத்தம் 47 பயனாளிகளுக்கு ரூ. 98.39 லட்சம் மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளை கலெக்டர் தங்கவேல், எம்எல்ஏ சிவகாமசுந்தரி ஆகியோர் வழங்கினர்.

இந்த ஆய்வின்போது மாவட்ட வருவாய் அலுவலர் கண்ணன், குளித்தலை சார் ஆட்சியர் ஸ்வாதிஸ்ரீ, மகளிர் திட்ட இயக்குநர் பாபு, கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் கந்தராஜா, சமூக பாதுகாப்பு திட்ட தனித்துணை ஆட்சியர் பிரகாசம், சுகாதார பணிகள் துணை இயக்குனர் டாக்டர் சுப்பிரமணி, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) சரவணன், யூனியன் சேர்மன் சுமித்ரா தேவி, வட்டார வளர்ச்சி அலுவலர் தேன்மொழி மற்றும் முருகேசன், கிருஷ்ணராயபுரம் தாசில்தார் பிரபாகர் மற்றும் பல்வேறு துறை சார்ந்த அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

▶ கிருஷ்ணராயபுரம் வட்டத்தில் நடைபெற்ற "உங்களைத் தேடி,உங்கள் ஊரில்" திட்ட முகாமில் கலெக்டர் தங்கவேல் மற்றும் கிருஷ்ணராயபுரம் எம்எல்ஏ சிவகாமசுந்தரி ஆகியோர் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இன்று மீண்டும் கள ஆய்வு

அப்பகுதிகளில் தங்கி இன்று அதிகாலை 6 மணி முதல் அவ்வட்டாரத்தில் மேற்கொள்ளப்படும் தூய்மைப் பணிகள், குடிநீர் வசதிகள், பொதுப் போக்குவரத்துச் சேவை, முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், பால் விநியோகம் குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட உள்ளனர்.

GRIHUM HOUSING FINANCE

க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்

(முன்னதாக பூனாவால்லா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்றறியப்பட்டது)

பதிவு பெற்ற அலுவலகம்: 602, 6 ஆவது தளம், வீரோ ஒன் டை பார்க், எல்ஆர்.எண்.79/1, கோர்பாடி, முந்த்வா ரோடு, புனே-411036.

கோரிக்கை அறிவிப்பு சர்ஃபாசி சட்டம், 2002-இன் பிரிவு 13(2) கீழ்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்/ உப கடன்தாரர்/ ஜாமின்தாரர்கள் ஆகிய நீங்கள், உங்கள் அசையா சொத்து அல்லது சொத்துகளையோ, சொத்து வசதிகளையோ வீட்டுக் கடன்/கடன்கள் பெறுவதற்காக க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் முன்னதாக பூனாவால்லா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்றறியப்பட்டது. பூனாவால்லா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்ற பெயர் க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்று 17 நவம்பர் 2023 தேதியிலிருந்து மாற்றப்பட்டுள்ளது முன்னதாக மக்மா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்ற அறியப்பட்டது முதலில் ஐஜி மனி ஹவுசிங் பைனான்ஸ் ப்ளிக் லிமிடெட் கம்பெனி என்ற பெயருடைய நிறுவனத்துடன் இணைக்கப்பட்டது) இதற்குப் பின்னர் கடனீட்டுக் கடனீந்தோர் என்று குறிப்பிடப்படும் நிறுவனத்தில் அடமானம் வைத்திருக்கிறீர்கள். நீங்கள் கடனைத் திருப்பிச் செலுத்தத் தவறியதால், உங்களுடைய கடன் செயல்படாத சொத்துப் பிரிவில் வகைப்படுத்தப்பட்டுள்ளது. கடனீட்டு நிதிச் சொத்து மறுசீரமைப்பு மற்றும் கடனீட்டு அமலாக்கச் சட்டம் 2002 மற்றும் கடனீட்டு (அமலாக்க) விதிகள் 2002 இன் கீழ் திருப்பிச் செலுத்தப்படாத கடனை மீட்பதற்காக கோரிக்கை அறிவிப்பு உங்களுடைய கடைசியாக அறிவிக்கப்பட்ட முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட்டு, அதை நீங்கள் பெற்றுக் கொள்ளாததால் திரும்ப வந்துவிட்டது. எனவே கோரிக்கை அறிவிப்பில் உள்ளவற்றை கடனீட்டு அமலாக்கச் சட்டம் 2002 பிரிவு 13(2), விதி 3 (1) இன் படி மாற்றுமுறையில் வெளியிடப்பட்டுள்ளது.

கடன்தாரர்கள், உப கடன்தாரர்கள், ஜாமின்தாரர்கள், பாதுகாவலர்கள், செலுத்தப்பட வேண்டிய நிலுவைத் தொகை ஆகிய விவரங்கள் கோரிக்கை அறிவிப்பு கீழே குறிப்பிடப்பட்டவர்களுக்கு மேற்படி சட்டத்தின் பிரிவு 13 (2) கீழ் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

வ. எண்	கடன்தாரர், உப கடன்தாரர், ஜாமின்தாரர் பெயர் மற்றும் கடன் தொகை	கடனீட்டுச் சொத்துகளின் விவரங்கள்:	கோரிக்கை அறிவிப்பு நாள் / நிலுவைத் தொகை ரூ.
1.	ராஜலட்சுமி சின்னையா, மனைவி மற்றும் சின்னையாவின் சட்டப்பூர்வ வாரிசு துரைசாமி (காலமானதிலிருந்து) கடன் தொகை: ரூ.7,00,000/- கடன் எண்: HF0128H21100044	கதவு எண். 11/1240, R.S.No.588 8, தோப்பம்பட்டி கிராமம் மற்றும் பஞ்சாயத்து, மணப்பாறை யூனியன் பஞ்சாயத்து, மணப்பாறை துணை மாவட்டம், மணப்பாறை தாலுகா, திருச்சி மாவட்டம், தோப்பம்பட்டி பஞ்சாயத்து அலுவலகம், பின்கோட்: 621 306 இல் அமைந்து உள்ள 460 ச.அடி பரப்பளவு உள்ள அனைத்து துண்டு மற்றும் பகுதி உள்ள சொத்து. எல்லைகள்: கிழக்கு: கமுதாயக் கூடம், அரசு சொத்து, மேற்கு: தண்ணீர் தொட்டி, வடக்கு: 15 அடி கிழக்கு மேற்கு சாலை, தெற்கு: கழிப்பறை மற்றும் கட்டுமானத்தில் உள்ள துரைசாமி கட்டடம்	14.10.2024 ரூ.9,83,577.39/- (ரூபாய் ஒன்பது இலட்சத்து எண்பத்து மூன்றாயிரத்து ஐந்நூற்று எழுபத்தேழு மற்றும் பைசா முப்பத்தொன்பது மட்டும்) மற்றும் கடன் தொகைமைத் திருப்பிச் செலுத்தும் காலம் வரையிலான கூடுதலான ஆண்டொன்றுக்கு 18.5% வட்டி.

எனவே கடன்தாரர்/கள் மற்றும் உப–கடன்தாரர்கள்/ ஜாமின்தாரர்கள் ஆகிய நீங்கள் மேற்குறிப்பிட்ட கோரப்பட்ட தொகையை இங்கே மேலே குறிப்பிட்டவாறு மேற்கொண்டு வட்டியுடன் இந்த அறிவிப்பின் 60 நாட்களுக்குள் முழுமையாகச் செலுத்துமாறு கோரப்படுகிறீர்கள். தவறினால் கீழே கையொப்பமிட்டவர் மேற்குறிப்பிட்ட கடனீட்டுச் சொத்துகளின் மீதான சட்டத்தின் கீழ் நடவடிக்கையை செயல்படுத்தும் நிர்பந்தத்துக்கு உள்ளாவார். அதேவேளையில் நீங்கள், மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13(13) இன்படி, எங்கள் ஒப்புதலின்றி விற்பனை, குத்தகை அல்லது பிறவழியில் மேற்கூறிய கடனீட்டுச் சொத்துகளை பெயர் மாற்றம் செய்வதற்கு தடை செய்யப்பட்டிருக்கிறீர்கள் என்பதை கவனத்தில் கொள்ளவும்.

இடம்: தமிழ்நாடு
நாள்: 25.10.2024

ஒம்/–அதிகாரப்பூர்வ அதிகாரி,
க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் (முன்னதாக பூனாவால்லா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்றறியப்பட்டது)

TATA

டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்

பதிவு முகவரி: 11ஆவது தளம், டவர் A, பெனின்சுலா வர்த்தகப் பூங்கா, கண்டத்ராவ் கடம் மார்க், லோயர் பரேல், மும்பை 400 013.
கிளை முகவரி: டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட், முதல் தளம், நூற்றாண்டு சதுக்கம், எண்.6A, டாக்டர் அம்பேத்கர் சாலை, கோடம்பாக்கம், சென்னை–600 024.

அசையாச் சொத்து விற்பனை அறிவிப்பு

(கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள் 2002 இன் விதி 8 (6) உடன் விதி எண். 9(1) இன் கீழ்)
கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள் 2002 இன் விதி 8 (6) உடன் விதி 9(1) விதிமுறையுடன் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்கம்), 2002 கீழ் அசையாச் சொத்துகள் மின் –ஏல விற்பனை அறிவிப்பு

இதன்மூலம் பொதுமக்களுக்குப் பொதுவாக மேலும் கீழுக்காணும் கடன்தாரர் மற்றும்/ உப–கடன்தாரர், அல்லது அவர்தம் சட்டப்பூர்வ வாரிசுகள்/பிரதிநிதிகள் (கடன்தாரர்கள்) ஆகியோருக்கு குறிப்பாக வழங்கப்படும் அறிவிப்பாவது, **டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் (டிசிஎச்எல்)** வசம் அடமானம் வைக்கப்பட்ட, டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின் அதிகாரப்பூர்வ அதிகாரியால் கவாதீனம் செய்யப்பட்டிருக்கும் கீழே விவரிக்கப்பட்ட அசையாச் சொத்தானது, கீழே குறிப்பிட்ட கடன்தாரர் மற்றும் உப–கடன்தாரர்களிடமிருந்து நிலுவைத்தொகைகளை மீட்பதற்காக **'உள்ளது உள்ளவிடத்தில்' & 'உள்ளது உள்ளவாறு'** மேலும் **'உள்ளது எதுவோ அது' அடிப்படையில் 11–11–2024** நாளில் விற்பனை செய்யப்பட உள்ளது. நிர்ணய விலை மற்றும் முன்வைப்புத்தொகை கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. இதன்மூலம் வழங்கப்படும் அறிவிப்பாவது, விற்பனை ஒத்தி வைப்பு/ விற்பனை நிறுத்தம் ஏதும் இல்லாதபட்சத்தில், மேற்கூறிய கடனீட்டுச் சொத்து/ சொத்து ஆனது மேற்கூறிய **11–11–2024** நாளில் பிற்பகல் **2.00** மணிக்கு மின்–ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும். மின்–ஏலத்தில் பங்கேற்பதற்கான முன்வைப்புத்தொகை கேட்பு வரைவோலை அடங்கிய முத்திரையிடப்பட்ட உறையானது கிளை முகவரி: **டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட், முதல் தளம், நூற்றாண்டு சதுக்கம், எண்.6A, டாக்டர் அம்பேத்கர் சாலை, கோடம்பாக்கம், சென்னை–600 024** இடத்தில் **09–11–2024 அன்று மாலை 5 மணி வரை** அல்லது அதற்கு முன்பாக டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின் அதிகாரப்பூர்வ அதிகாரியிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். கடனீட்டுச் சொத்து/ அசையாச் சொத்து விற்பனை இங்கே கீழே விவரிக்கப்பட்ட சுருக்கமான விவரங்களின்படி **'உள்ளது உள்ளவிடத்தில்** நிபந்தனையில்' ஆனதாகும்:

வ. எண்	கடன் கணக்கு எண்	கடன்தாரர்(கள்) / உப–கடன்தாரர்(கள்) சட்டப்பூர்வ வாரிசு(கள்) / சட்டப்பூர்வ பிரதிநிதி/ ஜாமின்தாரர்(கள்) பெயர்	கோரிக்கை அறிவிப்பின்படி தொகை	நிர்ணய விலை	முன்வைப்புத் தொகை	சுவாதீன வகை
7	TCHHL0481 0001001812 49 & TCHHF0481 0001001813 53 & TCHIN04810 0010018514 3	திரு. ராஜேந்திரன் TM, ஆர்ஸம் ஈவன்ட் டெகரேசன் திருமதி. முத்துலக்ஷ்மி R	ஒப்பந்த எண். TCHHL0481000100181249 இன்படி செலுத்த வேண்டிய தொகை ரூ. 6,56,414/– மற்றும் ஒப்பந்த எண். TCHHF0481000100181353 இன்படி ரூ.14,98,716/– செலுத்த வேண்டிய தொகை மற்றும் ஒப்பந்த எண்.TCHIN0481000100185143 இன்படி செலுத்த வேண்டிய தொகை ரூ.1,08,576/– என மொத்தம் ரூ.22,63,706/– (ரூபாய் இருபத்திரண்டு லட்சத்து அறுபத்து மூன்றாயிரத்து எழுநூற்று ஆறு மட்டும்) & 23.12.2023	Rs. 20,00,000/- (ரூபாய் இருபது இலட்சம் மட்டும்)	Rs. 2,00,000/- (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்)	கையக

அசையா சொத்தின் விவரங்கள்: அட்டவணை– A சொத்து (சொத்தின் மொத்த பரப்பளவு) திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருச்சி பதிவு மாவட்டம், திருவெறும்பூர் தாலுகா, திருவெறும்பூர் சார் பதிவு மாவட்டம், துவாக்குடி கிராமம், கிராம அயன் புஞ்சை சர்வே எண்.558/1– இல் 0.86 ஏக்கர் அல்லது சென்ட் 37496 ச.அடி, இதில் நிலத்தின் மிகப்பெரிய பரப்பளவு உள்ள பகுதி வீட்டுமனைகளாக ஒப்புதல் எண்.24/2019 இன்படி "அமிர்த சஞ்சீவி நகர்" என்ற பெயரில் குடியிருப்பு மனைகளாக மாற்றப்பட்டுள்ளன. இதில் மனை எண்.6 இல் மொத்தம் 1263½ ச.அடியில் 523½ ச.அடியும் மற்றும் மனை எண். 7 இல் மொத்தம் 1726 ச.அடியில் 1202½ ச.அடியும் கொண்டவை. எல்லைகள்: **வடக்கு:** மனை எண்.6 நிலத்தின் எஞ்சிய பகுதி, **தெற்கு:** மனை எண்.8, **கிழக்கு:** 23 அடி அகல லே அவுட் சாலை, **மேற்கு:** மனை எண்.4 & 5. **மனை எண்.6 இன் அளவீடு:** கிழக்கு மேற்காக வடக்கு பக்கம்: 37 அடி, கிழக்கு மேற்காக தெற்கு பக்கம்: 37 அடி, தெற்கு வடக்காக கிழக்கு பக்கம்: 14.8 அடி, தெற்கு வடக்காக மேற்கு பக்கம்: 13.5 அடி என நிலத்தின் மொத்த பரப்பு 523½ ச.அடி, **மனை எண்.7 இன் அளவீடு:** கிழக்கு மேற்காக வடக்கு பக்கம்: 37 அடி, கிழக்கு மேற்காக தெற்கு பக்கம்: 37 அடி, தெற்கு வடக்காக கிழக்கு பக்கம்: 32.6 அடி, தெற்கு வடக்காக மேற்கு பக்கம்: 32.6 அடி என நிலத்தின் **மொத்த பரப்பு 1202½ ச.அடி** இவ்வாறாக ஒட்டுமொத்த நிலத்தின் பரப்பு 523½ ச.அடி + 1202½ ச.அடி = 1726 ச.அடி

ஏலத்தில், பொதுவாக பொதுமக்கள் தனிப்பட்ட முறையில் தங்கள் ஏலப்புள்ளி(களை) சமர்ப்பிக்க வரவேற்கப்படுகின்றனர். கடன்தாரர்(கள்)/ உப–கடன்தாரர் (கள்) ஆகியோருக்கு இந்த அறிவிப்பு பிரகாரமான தேதியிலிருந்து 15 நாட்களுக்குள் மேற்கொண்டு வட்டியுடன் மொத்த நிலுவைகளைச் செலுத்த இதன்மூலம் கடைசி வாய்ப்பு வழங்கப்படுகிறது. அவ்வாறு செலுத்த தவறினால் அசையாச் சொத்து திட்டமிட்டபடி விற்பனை செய்யப்படும். ஏலத்தேதிக்கு முன்பாக மேற்கூறிய நிலுவைத்தொகை, வட்டி மற்றும் செலவுகளுடன் (விற்பனை செலவு உட்பட) அதிகாரப்பூர்வ அதிகாரியிடம் வழங்கப்பட்டால் அல்லது இவ்வித கடனீட்டுக் கடன்தொகை, வட்டி மற்றும் செலவுகள் செலுத்தப்பட்டுள்ளன என்று அவருடைய திருப்திக்குரியவாறு சான்று அளிக்கப்பட்டால் மின்னணு ஏலம் நிறுத்தப்படும்.

இந்த விற்பனை தொடர்பாக ஏதேனும் பணியை செயல்படுத்திக் கொண்டிருக்கும் அலுவலர் அல்லது பிற நபர், விற்கப்படும் அசையாச் சொத்தில் ஏதேனும் பயனைக் கைப்பற்ற அல்லது கைப்பற்ற முயற்சிக்கும்விதமாக நேரடியாக அல்லது மறைமுகமாக ஏலப்புள்ளி அளிக்கலாகாது.

விற்பனையானது கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இல் வரையறுக்கப்பட்ட நிபந்தனைகள் மற்றும் பின்வரும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டது ஆகும்:

கவனிக்க: மின்–ஏலம் ஆனது https://www.bankauctions.in என்ற இணைய முகப்பு மூலம் 11–11–2024 அன்று பிற்பகல் 2.00 மணி முதல் 3.00 மணிக்குள் தலா 5 நிமிடங்கள் வரையறுக்கப்பட்ட நீட்டிப்புடன் நடைபெறும்.

விதிமுறைகள் மற்றும் நிபந்தனை: 1. இங்கே கீழே அட்டவணையில் குறிப்பிட்டுள்ள விவரங்கள் கீழே கையொப்பமிட்டவருக்கு நன்கு தெரிந்த வரையில் தெரிவிக்கப்பட்டுள்ளன. ஆனால் கீழே கையொப்பமிட்டவர் இந்த அறிவிப்பில் ஏதேனும் பிழை, தவறான அறிக்கை அல்லது விடுபடுதலுக்கு பொறுப்பேற்க மாட்டார். ஏலப்புள்ளி தொகை, அல்லது ஏலதாரரிடம் ஏதேனும் பூசல் எழுமானால், அதிகாரப்பூர்வ அதிகாரியின் விருப்ப உரிமைக்கு உட்பட்டு அசையாச் சொத்து மீண்டும் ஒருமுறை ஏலத்திற்கு வைக்கப்படும். **2. நிர்ணய விலைக்கு குறைவாக அசையாச் சொத்து விற்பனை செய்யப்பட மாட்டாது. 3. ஏலம் உயர்த்தும் தொகை: ரூ.10,000/– (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) 4.** சொத்து கொள்முதலுக்காக சமர்ப்பிக்கப்படும் அனைத்து ஏலப்புள்ளிகளும் கிளை முகவரியில் மாற்றத்தக்க வகையில் TATA CAPITAL HOUSING FINANCE LTD பெயரிலான கேட்பு வரைவோலை மூலம் மேற்குறிப்பிட்டவாறான முன்வைப்புத் தொகையால் இணைக்கப்பட்டிருக்கப்பட வேண்டும். வெற்றி பெறாத ஏலதாரர்களுக்கு ஏலம் முடிந்த பிறகு கேட்பு வரைவோலைகள் திருப்பியளிக்கப்படும். NEFT/RTGS/IMPS வழியே முன்வைப்புத்தொகை செலுத்துவதற்கு, அதிகாரப்பூர்வ அதிகாரியை தொடர்பு கொள்ளவும். **5.** உயர்ந்தபட்ச ஏலதாரர், ஏலப்புள்ளி அளிக்க அவர் எப்போதும் சட்டப்பூர்வ தகுதியடைந்தவர். மேலும் ஏலப்புள்ளித் தொகை நிர்ணய விலைக்கு குறைவில்லாதது என்பதை பொறுத்து வெற்றிகர ஏலதாரராக அறிவிக்கப்படுவார். அளிக்கப்பட்ட விலை பற்றாக்குறையென தெளிவாக காணப்படுகையில் உயர்ந்தபட்ச ஏலப்புள்ளியை ஏற்க மறுப்பது அதிகாரப்பூர்வ அதிகாரியின் விருப்பவுரிமை முடிவிலானது ஆகும். **6.** பதிவு செய்யப்பட்ட காரணங்களுக்காக, விற்பனையை ஒத்தி வைத்தல்/நிறுத்துதல் என்பது அதிகாரப்பூர்வ அதிகாரியின் விருப்பவுரிமை முடிவிலானது ஆகும். **7. முன் அனுமதியின் பேரில் 28–10–2024 அன்று காலை 11 மணி முதல் மாலை 5.00 மணிக்குள் அசையாச் சொத்தினை பார்வையிடலாம். 8.** வெற்றிகர ஏலதாரராக அறிவிக்கப்பட்ட நபர், இவ்வித அறிவிப்புக்கு பிறகு உடனடியாக, 24 மணி நேரத்திற்குள் அதிகாரப்பூர்வ அதிகாரியிடம் முன்வைப்புத்தொகை உள்ளடக்கமாக கொள்முதல் பணம்/ஏலப்புள்ளி தொகையின் இருபத்தைந்து சதவீதத்தை செலுத்த வேண்டும் மேலும் இவ்விதம் செலுத்தத் தவறினால், ஏலமிடப்பட்ட சொத்து உடனடியாக புதிதாக ஏலத்திற்கு வைக்கப்படும்/தனி ஒப்பந்தம் மூலம் விற்கப்படும். **9.** மேற்கூறியவாறு முதற்கட்டத் தொகை செலுத்தப்பட்டு விட்டால், செலுத்த வேண்டிய கொள்முதல் பணத்தின் மீதித்தொகையானது சொத்து விற்பனை உறுதியான தேதியிலிருந்து, இந்த நாளை தவிர்த்து,15 ஆம் நாளில் அல்லது அதற்கு முன்பாக செலுத்த வேண்டும். 15வது நாள் ஞாயிற்றுக்கிழமை அல்லது பிற விடுமுறையாக அமைந்தால், 15 ஆவது நாளுக்கு பிந்தைய முதல் அலுவலக நாளில் அதிகாரப்பூர்வ அதிகாரியிடம் கொள்முதலாளரால் செலுத்தப்பட வேண்டும். **10.** மேற்குறிப்பிட்ட காலத்திற்குள் பணப்பட்டுவாடா செய்ய தவறும்பட்சத்தில், சொத்து புதிதாக ஏலத்துக்கு வைக்கப்படும்/ தனி ஒப்பந்தம் மூலம் விற்கப்படும். முன்வைப்புத்தொகை உட்பட செலுத்தியத் தொகை **டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்** மூலம் கைக்கொள்ளப்படும். ஏற்கெனவே ஏலம் எடுத்தவர் சம்பந்தபட்ட நிலம்/ தொகை தொடர்பாக எந்த உரிமையையும் கோர முடியாது. **11.** மேற்கூறப்பட்டசொத்து தொடர்பான **டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடுக்குத்** தெரிந்த, ஏதேனும் வில்லங்கங்களின் விவரங்கள் பற்றியும், மேலும் அந்த சொத்து தொடர்பான சொத்தின் தன்மை மற்றும் மதிப்பு குறித்த பிற விவரங்கள் மற்றும் சொத்து வரி, மின்கட்டணம் ஏனைய சட்டப்பூர்வ பொறுப்பு நிலுவைகள் உட்பட சொத்து மீதான வில்லங்கங்கள் குறித்து ஏலம் எடுக்கத் திட்டமிடும் ஏலதாரர்கள் தங்கள் சொந்த தனி விசாரணைகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார். **12. அனைத்து பிற விவரங்களுக்கு அல்லது மின்–ஏலம் மீதான இயங்குதள பயிற்சி நடைமுறைக்கு. எதிர்நோக்கும் ஏலதாரர்கள்– சேவை வழங்குநர், M/s.4Closure, பிளாக் எண்.605 A, 6 ஆவது தளம், மைத்திவனம் வணிக வளாகம், அமீர்பேட், ஹைதராபாத்–500038 என்ற முகவரியில் ஒருங்கிணைப்பாளர்கள் கர்நாடகா & கோவா, கைபேசி எண்.8142000809, srinivas@bankauctions.in & தெலங்கானா & ஆந்திரபிரதேசம் கைபேசி எண். 8142000064, prakash@bankauctions.in & ஒடிசா, மேற்கு வங்காளம், சத்தீஷ்கர் வடகிழக்கு மாநிலங்கள், கைபேசி எண். 814200030, pradhan@bankauctions.in & தமிழ்நாடு & கேரளா, கைபேசி எண்.8142000735, dinesh@bankauctions.in & டெல்லி, என்சிஆர், பஞ்சாப், குஜராத், ஹரியானா & வடக்கு மாநிலங்கள், கைபேசி எண்.9515160064, prakash@bankauctions.in & மகாராஷ்டிரா, குஜராத் & மத்திய பிரதே